படைத்துள்ளார்கள் என்பதை மிகவும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலே காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.9 கோடியே 26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணை எண் 873, உள் துறை, நாள் 28-11-2014-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள் கட்ட பொதுப் பணித் துறையால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

100—

கால்நடைக் கிளை நிலையம்

***52753—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, கதிராநல்லூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

2015 மார்ச் 31]

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாமக்கல் தொகுதி, கதிராநல்லூர் ஊராட்சியிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால் மூன்றாயிரம் கால்நடை அலகுகள் தேவைப்படுகின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் கதிராநல்லூர் ஊராட்சியில் இரண்டாயிரம் கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. எனவே, அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன்.

நாமக்கல் தொகுதி, கதிராநல்லூர் ஊராட்சியில் கால்நடைகள் குறைவாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இருப்பினும், இங்குள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போட அதிக தூரம் செல்ல வேண்டியிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதிராநல்லூர் ஊராட்சி மூன்றாயிரம் கால்நடை அலகுகள் கொண்டதாக தரம் உயரும்போது அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும். இருப்பினும், அங்கே கால்நடைகளுக்கு மருத்துவம் பார்ப்பதற்கு வசதியாக, Part-time dispensary-ல் வாரம் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு மருத்துவர்கள் அங்கே வந்து கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்கின்ற வகையிலே மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

விளையாட்டுக் கல்லூரி

***22235 திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரில் விளையாட்டுக் கல்லூரி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூரில் அரசு விளையாட்டுக் கல்லூரி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை விளையாட்டுத் துறையில் நாட்டின் முதன்மை இடத்திற்குக் கொண்டு செல்ல மகத்தான திட்டங்களைத் தந்துள்ள மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*